**HMOP Chief**

DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )

HMOP No. 159/2023

****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : **முத்துக்குமார்** |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 23.07.2026 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இம்மனுவின் மனுதார் ஆவேன். நான் மனுதார் தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது, முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். 17.03.2019 தேதியில் உபயமனுதார்களுக்கு நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் அசல் **ம.சா.ஆ.1** ஆகும். திருமண பதிவு சான்று சார்பதிவாளர் நகல் **ம.சா.ஆ.2** ஆகும். உபயமனுதார்கள் புகைப்படம் **ம.சா.ஆ.3** ஆகும். மனுதாரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **ம.சா.ஆ.4** ஆகும். எதிர்மனுதார் மற்றும் அவரது உறவினர்கள் மீது சின்னக்கோவிலான்குளம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கு எண்.11/2023 கணினி நகல் **ம.சா.ஆ.5** ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கும், எதிர்மனுதாருக்கும் மார்ச் 17, 2019 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனக்கும், எதிர்மனுதாருக்கும் குழந்தைகள் ஏதும் இல்லை. குழந்தை இல்லாததால் எனக்கும், எதிர்மனுதாருக்கும் அடிக்கடி சண்டைகள் வருவது உண்டு என்றால் சரிதான். எங்களுக்குள் சண்டை ஏற்பட்டு சின்ன கோவிலான்குளம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவாகியுள்ளது என்றால் சரிதான். ஊர் பெரியவர்கள் வைத்து இருவரும் பேசி கொண்டோம் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் ஏழு வருடங்களாக பிரிந்திருக்கிறோம் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ எந்த வாய்ப்பும் இல்லை.

DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
HMOP.No.159/2023
****

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | RW1 |
| Name | : | **கனகலட்சுமி** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 23.07.2026 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இம்மனுவின் எதிர்மனுதார் ஆவேன். நான் எதிர்மனுதார் தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது, முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன்.

**மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கும், மனுதாருக்கும் பெரியகோவிலான்குளம் கிராமத்தில் உள்ள அம்மன் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின் நான் மனுதார் வீட்டில் தான் குடியிருந்தேன் என்றால் சரிதான். திருமணம் ஆன காலத்தில் இருந்து எங்கள் இருவருக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டது என்றால் சரிதான். திருமணம் ஆன முதல் இரண்டு வருடமாக என்னுடைய கணவர் வீடு மற்றும் என்னுடைய அம்மா வீட்டிற்கு செல்வதுமாக இருந்தேன். அதன்பின்பு 5 வருடமாக நான் என்னுடைய அம்மா வீட்டில் தான் இருக்கிறேன். இனிமேல் நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். மனுதார்

கோரியுள்ள பரிகாரத்தை மனுதாருக்கு வழங்க எனக்கு சம்மதம் என்றால் சரிதான். என்னுடைய சீதன பொருட்கள் எல்லாம் என்னுடைய வீட்டில் தான் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வாழ்நாள் ஜீவனாம்சமாக ரூ.3,00,000/- மனுதாரிடமிருந்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான்.